கெ. ஜெயானந்தரூ

# தெக்ஷிண கான சபா

ஸ்தாபிதம்: 1947

ஸ்தாபகர்

செல்வி. இராஜராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்
(சங்கீத டிப்லோமா)

# புதிய மண்டபம்

# திறப்பு விழா

**1988**

12, சாரதா வீதி,
திருகோணமலே.

# தெக்ஷிண கான சபா

## நிர்வாக சபை

*தலைவர்*

திருமதி பா. நல்லரெட்ணசிங்கன்

*செயலாளர்:* செல்வி க. ஏரம்பு

*பொருளாளர்:* திருமதி பா. சங்கரதாஸ்

*அங்கத்தவர்கள்:*

திரு. P. கந்தையா, திருமதி P. இன்பரெட்ணம்,
திரு. G. சண்முகநாதன், திரு. C. நற்குணம்,
திரு. G. இராமபாலன், திரு. K. குகதாசன்

*தொண்டர் ஆசிரியை:* செல்வி ந. நற்குணம்

- நாவல் -

# உள்ளக் கோயிலில்

*எழுதியவர்*

பாலேஸ்வரி நல்லரெட்ணசிங்கன்

தெக்ஷிண கான சபா திறப்பு விழாவின்போது உங்கள் பிரதியை வாங்கத் தவறியிருந்தால்,

*கிடைக்குமிடங்கள்:*

**வாணி புத்தகசாலை**
*வித்தியாலயம் வீதி,*
*திருகோணமலை,*

**ஸ்ரீ கணேச அச்சகம்**
*வித்தியாலயம் வீதி,*
*திருகோணமலை.*

*157, டைக் வீதி,*
*திருகோணமலை.*

உ

# திருக்கோணமலை தெக்ஷிணகான சபா

## (செல்வி பா. இராஜராஜேஸ்வரி ஞாபக கலாநிலையம்)

# திறப்பு விழா

திருக்கோணமலை தெக்ஷிணகான சபா இசைமேதை செல்வி பா. இராஜராஜேஸ்வரி அவர்களால் 1947ம் ஆண்டு நான்கு மாணவிகளோடு ஸ்தாபிக்கப்பட்டது. திருக்கோணமலையில் உள்ள வசதியற்ற பிள்ளைகள் இலவசமாக இசைபயில வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இச்சபா ஆரம்பிக்கப்பட்டது. எத்தனையோ இடையூறுகள் சிரமங்கள் மத்தியிலும் 'இலவசம்' என்ற நோக்கம் பிழைக்காமல் இன்றுவரை இலவசமாகவே சங்கீதம் கற்பிக்கப்படுகிறது என்பது ஈண்டு கட்டாயம் குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும்.

தன் உடல் பொருள் ஆவி அனைத்தையும் இசையுலகிற்கே அர்ப்பணித்து திருக்கோணமலை மண்ணில் இசைபரப்பி பல இசை ஆசிரியர்களை உருவாக்கிய பெருமை செல்வி பா. இராஜராஜேஸ்வரி அவர்களையே சாரும். அன்னார் துரதிர்ஷ்டவசமாக 1972ம் ஆண்டு இவ்வுலகை நீத்தார்.

அன்னாரின் மறைவுக்குப் பின் 1980ம் ஆண்டு வரை பழைய மாணவர்கள் சிலர் சேர்ந்து திரு பா. நேமிநாதன் தலைமையில் இசை வகுப்புகளைத் தொடர்ந்து நடாத்தி சபா மூடப்படாமல் காப்பற்றி வந்துள்ளனர். அதுவரை காலமும் வகுப்புக்கள் நடந்து வந்த செல்வி பா. இராஜராஜேஸ்வரியின் இல்லத்தின் உரிமை 1981ம் ஆண்டு கை மாறியதால் அன்னாரின் தந்தை முகாந்திரம் த. பாலசுப்பிரமணியம் அவர்கள் சபாவின் பெயருக்கு அன்பளிப்புச் செய்திருந்த சாரதா வீதி, 12ம் இலக்கக் காணியில் அமைந்திருந்த தற்காலிகத் தகரக் கொட்டகை ஒன்றில் சில திருத்தங்களுடன் புதிய நிர்வாகக் குழுவினரால் வகுப்புகள் தொடர்ந்து நடாத்தப்பட்டன.

பெற்றோர் நலன்விரும்பிகள் பொதுமக்கள் தொண்டர் ஆசிரியர்களாக சேவை செய்ய முன்வந்த செல்வி ந. நகுலேஸ்வரி செல்வி ந. நவநீதராணி ஆகியோரின் ஒத்துழைப்புடன் சபா இயங்கியது. வட இலங்கை சங்கீத சபாவால் நடாத்தப்பட்டு வந்த சங்கீதப் பரீட்சைக்கு சபா மாணவர்கள் தோற்றி நல்ல பெறுபேறுகளை எடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சபாவுக்குக் கிடைத்து வந்த நன்கொடைப் பணம் 1975-ம் ஆண்டுடன் நிறுத்தப்பட்டிருப்பதை அறிந்து அதைப் புதுப்பிக்கப் புதிய நிர்வாகக் குழு மீண்டும் 1981-ல் விண்ணப்பித்த போது கட்டட வசதி நீர் விநியோகம் மின் விநியோகம் ஆகியன சட்டதிட்ட

படி இருந்தால்தால் நன்கொடை வழங்கப்படுமென எமக்கு அறிவிக்கப்பட்டது.

ஆனல் நாட்டு நிலை சீராக இல்லாத காரணத்தால் அபிவிருத்தி வேலைகள் எதையும் திட்டமிட்டுச் செய்ய முடியவில்லை. பொதுக் கூட்டங் கூட இரண்டு முறை கூடுவதற்கு பிரயத்தனஞ் செய்யப்பட்டும் ஊரடங்கு பாதுகாப்பின்மை போன்ற காரணங்களால் அது கைவிடப்பட்டு பழைய நிர்வாகக் குழுவே நாட்டு நிலைமை ஓரளவு சீரடையத் தொடங்கியதும் சென்ருண்டு இறுதியில் அபிவிருத்தி வேலைக்கான திட்டங்களை வகுத்து செயற்படத் தொடங்கியது.

இதற்கிடையில் செல்வி சரஸ்வதி சுவாமிநாதன் அவர்கள் நகராண்மைக் கழக முதல்வராக இருந்த போது எமக்கு மின் இணைப்புக் கிடைத்தது. அடுத்து நீர்விநியோகமும் பெற்ருேம்.

திரு N. பத்மநாதன் அவர்கள் உ.அ, அதிபராக இருந்த போது எமது வேண்டுகோளை ஏற்று கலாச்சார அமைச்சுடன் தொடர்பு கொண்டு எமக்கு அரசாங்க நன்கொடைப் பணம் பெற்றுத்தர முயற்சித்த வேளை துரதிர்ஷ்டவசமாக அது நிறைவேறவில்லை. தற்போது கலாச்சார அமைச்சின் சட்டதிட்டங்களுக்கமைய மண்டபத்தின் நீளம் தவிர ஏனைய சகல வசதிகளும் செய்து முடிக்கப்பட்டு விட்டதால் இனியாவது எமக்கு நல்லகாலம் பிறக்குமென்ற நம்பிக்கையுண்டு.

ஆசிரியர்களுக்குரிய வேதனம் சம்பந்தமாக இந்து சமய கலாச்சார அமைச்சோடு தொடர்பு கொண்டோம். எமது சார்பில் திரு V R. நவரெட்ணராஜா அவர்கள் கொழும்பு செல்லும் வேளைகளில் பலமுறை அமைச்சரைக் கண்டு பேசியதன் விளைவாக வருடாந்தம் ஒருதொகைப் பணம் எமக்குத் தருவதாக உறுதியளிக்கப்பட்டபோதும் இதுவரை எதுவும் நிறைவேறவில்லை.

திருக்கோணமலைப் பிராந்திய அபிவிருத்தி திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திரு C. M. கணேசலிங்கம் அவர்களும் இது விடயமாக முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிருர்கள். கூடிய விரைவில் இந்துக்கலாசார அமைச்சு இந்த உதவியை சபாவுக்கு செய்யும் என எதிர்பார்க்கிருேம்.

சபாவில் மலசல கூடம் அமைப்பதற்கு திரு அலன் என்ற வெளிநாட்டவர் நாலாயிரம் ரூபா பணம் உதவினுர். அத்துடன் சபாப் பணமும் சேர்த்து சென்ற வருடம் ஒரு மலசல கூடம் அமைக்கப்பட்டது.

சபாவில் தற்போது நடனமும் கற்பிக்க ஒழுங்கு செய்துள்ளோம் செல்வி ராஜநந்தினி இலட்சுமணப்பெருமாள் எமது வேண்டு

கோளுக்கமைய இந்த வகுப்புக்களை நடத்தி வருகிறார். அன்னாருக்கு எமது நன்றி.

சபாவின் ஆசிரியை செல்வி நகுலேஸ்வரி அவர்கள் நாம் பொறுப் பேற்ற நாள் முதலாக இலவச சேவையே செய்து வருகிறார். சபா வின் முழுப் பொறும்பும் அவரே ஏற்று நடத்தி வருகிறார். இவ் வகையில் அவருக்கு நாம் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளோம்.

எமது வேண்டுகோளுக்கமைய அப்போது கொழும்பில் கடமை யாற்றிக் கொண்டிருந்த டாக்டர் ச. ஞானசேகரன் அவர்கள் எமக்கு ரூபா 500/- அனுப்பி உதவினர் பழையமாணவிகள் சிலர் மாதாந்தம் ரூபா 10/- கொடுத்துதவினர். இவர்களில் திருமதிகள் தே. முருகுப் பிள்ளை, பு ஜெயதேவா, வ. ஜெகதீஸ்வரன், வி. தவசிலிங்கம் ஆகி யோரே தொடர்ந்தும் நிதி உதவி வருகின்றனர். அத்துடன் மூன்று நிர்வாகக் குழு உறுப்பினரும் நலன் விரும்பிகளான செல்வி வ. முத் தையா, திருமதி இ, பாஸ்கரன் ஆகியோரும் இந்நிதித்திட்டத் திற்கு உதவி அளித்து வருகின்றனர். இப்பணம் காவலாளிக்கும் நீர் மின்விநியோகக்கட்டணம் ஆகியவற்றிற்கும் செலவாகிறது.

நிர்வாகக் குழுவினரின் அயராத முயற்சியின் பயனாய் மண்ட பம் ஒன்று எழுப்புவதற்கு வேண்டிய நிதியை நெதர்லாந்துத் தூதர கம் தந்துவியது அதைத் தொடர்ந்து சபாவின் பழைமாணவியான திருமதி விஜயகுமாரி, தவசிலிங்கத்தின் பெரும் நிதிப் பங்களிப்பால் எமக்கு உற்சாக மேற்பட்டு மேலும் இரு அறைகளையும் எல்லைச் சுவரையும் முடித்துள்ளோம்.

ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய தர்மகர்த்தா பிரமஸ்ரீ சோ. ரவிச்சந்திரக்குருக்கள் ஆலடி விநாயக தர்மகர்த்தாவும் ஸ்ரீ கணேச அச்சக உரிமையாளரும் பிரபல சோதிடருமான மு. சுந்தரலிங்க தேசிகர், திருக்கோணமலை. திருக்கேதீஸ்வர ஆலய விழாக்குழு, பழை யமாணவி திருமதி பிரேமா சிவசங்கரன் ஆகியோர் கணிசமான நிதியுதவி செய்துள்ளனர்.

இன்னும் பல பழைய மாணவிகள் பெற்றோர் நிர்வாக சபை யுறுப்பினர். நலன் விரும்பிகள் ஆகியோரும் திருக்கோணமலை இந்துக் கல்லூரி, ஸ்ரீ சண்முக வித்தியாலயம், விக்நேஸ்வர மகா வித்தியாலயம், சில வர்த்தகஸ்தாபபனங்கள் ஆகியனவும் எமக்கு உதவியுள்ளன. இப்படியாக எமக்கு நிதியுதவி சரீர உதவி பொருள் உதவி அளித்த அனைவருக்கும் சபாவின் சார்பில் எமது நன்றி உரித்தாகுக.

மற்றும் எமக்கு மறைமுகமாகவும் காகிதாதிகள், தட்டச்சுப் போன்ற உதவி நல்கியோருக்கும், சாபவின் சுவர்களை மெருகூட்ட வண்ணத் தீந்தை நல்கிய திருக்கோணமலை றோட்டரிக்கழகம், ஜன்னல் கதவுகளை அழகு படுத்த திரைச்சீலை உதவிய திருக்கோணமலை சிறுவர் பாதுகாப்பு நிதியம் (*S C. F.*) ஆகியவற்றிற்கும் சபா நன்றி கூறுகிறது.

1981ம் ஆண்டு சபாவின் பொருட்களை புதிய காணிக்குக் கொண்டு வருதவற்கான வாகனக் கூலிப்பணம் தகரக் கொட்டகைத் திருத்த வேலைகள் போன்றவற்றிற்கு ரூபா 5000/- தந்துதவிய டாக்டர் பா. யோகநாதன் அவர்களுக்கும் மின்சார உபகரணங்கள் உதவிய திரு *A. S. M.* ஜெயபால் அவர்களுக்கும் எல்லைச் சுவரின் ஒரு பகுதியைத் திருத்த உதவிய திருமதி சி. கிருஷ்ணசாமி அவர்களுக்கும் நாம் நன்றி கூறுகிறோம்.

சபாவின் பக்கத்துக் காணி உரிமையாளர் திரு ச. சரவணபவன் அவர் மனைவி ஆகியோர் பெருமனதோடு எமக்கு நீரும் ஏனைய சிறு உதவிகளும் செய்து ஒத்துழைத்தமைக்காக அவர்களுக்கும் நன்றி கூறுகிறோம்.

அன்பளிப்புச் செய்வதற்கு நாம் ஓர் திட்டத்தை வகுத்து அதை அஞ்சல் மூலம் அனுப்பியவுடன் எமது கோண்டுகோளை மதித்துப் பணத்தை எமது வீட்டுப்படியேறி ரொக்க மாக கொண்டு தந்த அனைவருக்கும் விஷேடமாக எமது நன்றியைச் செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம்.

30-1-88ல் எமது குறுகியகால வேண்டுகோளுக்கமைய சபாவின் புதிய கட்டடத்திற்கு அத்திவாரக் கல்நாட்டியும் சபாவின் கட்டட நிதிக்காக மேலதிகமாக 500 அபிராமி அந்தாதிப் பிரதிகளை இலவசமாக எமக்களித்த திரு மு. சுந்தரலிங்க தேசிகருக்கு எமது சிறப்பு நன்றியைத் தெரிவிக்கிறோம்.

சபாவின் பிரதான இயக்குனர் திரு பா. விஜயநாதன் திரு மு.கோ சங்கரதாஸ் இந்துக்கல்லூரி அதிபர் திரு அ. சிவலோகநாதன் ஆகியோர் வேண்டியபோது தேவையான உதவிகளைச் செய்தமைக்காக அவர்களுக்கும் எமது நன்றி.

எமது அழைப்பை ஏற்று இவ்விழாவில் கலந்து சபாவை கௌரவித்த பெரியோர்களுக்கும், வருகை தந்து எம்மை மகிழ்வித்த மற்றையோருக்கும் நாம் நன்றி கூறுகிறோம்.

'ஜே' கொந்தராத்து உரிமையாளர் எமக்கு இந்தக் கட்டடத்தை அமைத்துத் தந்தமைக்காகவும் வேறு புறம்பான பல திருத்த வேலைகளைச் செலவின்றிச் செய்தமைக்காகவும் அவருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

சபாத்தலைவர் என்ற முறையில் எனக்கு வேண்டிய உதவி நல்கிய நிர்வாகக்குழுவினருக்குக் குறிப்பாக காந்தி ஐயா என அன்பாக எல்லோராலும் அழைக்கப்படும் கந்தையா ஆசிரியர் அவர்களுக்கும் பொருளாளராயிருந்து எனக்கு உதவிய திருமதி பாக்கியலெட்சுமி சங்கரதாஸ் அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளேன்.

காந்தி ஐயா அவர்கள் ஓடோடி எமக்கு நிதிசேர்த்ததோடு பக்கபலமாய் நின்று உதவியமைக்காக அன்னாருக்கு விசேட நன்றி கூறுகிறேன்.

சபா மண்டபத்தில் திருக்கோணமலை இந்து இளைஞர் மன்றம் இந்து மகளிர் மன்றம் ஆகியவற்றின் அனுசரணையோடு ஞாயிறு தோறும் பன்னிரெண்டு வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு இந்து சமய வகுப்பு நடைபெறுகிறது. கட்டடவேலை பூர்த்தியானதும் அடுத் தவருடத்தில் இருந்து உயர் வகுப்பு மாணவர்களுக்கும் இவ்வகுப்பு விஸ்தரிக்கப்படும். இவ்வகுப்புகளுக்கு உங்கள் பிள்ளைகளை அனுப்பிப் பயன் பெறுக.

அத்துடன் உங்கள் குழந்தைகளை சபாவின் இலவச சங்கீத வகுப்புகளுக்கு அனுப்பி சபாவின் நிலை மீண்டும் உயரவும் உங்கள் பிள்ளைகளின்தரம் உயரவும் உதவுங்கள். வரப்புயர நீருயரும் என்றதற்கிணங்க.

உங்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் தொடர்ந்தும் சபா நாடி நிற்கின்றது. சபாவின் பணி இத்துடன் முடிந்து விடவில்லை, இருபதடி மண்டபத்தை இன்னும் இருபதடி நீட்ட வேண்டிய மகத்தான பணி உள்ளது. சோபியா நீர் விநியோகம் பெறவேண்டும். பலகாலம் இசைக்கப்படாமல் இருந்த இசைக்கருவிகள் அனைத்தும் திருத்தப்படவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக சபா ஆசிரியை செல்வி ந. நகுலேஸ்வரிக்கு உதவியாக முழுநேர ஆசிரியர் ஒருவரை நியமிக்க வேண்டி உள்ளது. இவற்றிற்கெல்லாம் நிதிதேவைப்படுகிறது.

ஆகவே மனமுள்ளவர்கள் வசதி படைத்தவர்கள் பணி முடிவடைந்து விட்டதே என்று மனத்திருப்தி அடையாமல் தொடர்ந்தும் இப்பணிகளைச் செய்து முடிக்க எவ்வகையிலேனும் உதவுக என்று மிகப் பணிவுடனும் அன்புடனும் வேண்டுகிறோம்.

நிதி திரட்ட ஆரம்பித்த போது நாம் ஞாபகார்த்த அன்பளிப்புகளுக்குப் பெயர்கள் பொறிக்கப்படும் என அறிவித்திருந்தோம் கடைசி நேரம் வரை ஞாபகார்த்த நிதிக்குப் பணம் வந்து கொண்டேயிருந்ததாலும் அவற்றை நிரைப்படுத்திய பின்பே பொறிக்கப் படவேண்டியிருந்ததாலும் அவ்வேலை தற்சமயம் முற்றுப் பெறுமல் உள்ளது. அவை பூர்த்தியாக்கப் பட்டதும் மண்டபச்சுவரில் அதற்கென விடப்பட்டுள்ள இடைவெளியிற் பொருத்தப்படும் என்பதைத் தெரியப்படுத்துகிறோம்.

இவ்வறிக்கை அச்சுக்குப் போனபின்னும் நிதியுதவி கிடைத்தால் அவை பொதுக்கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

கடைசியாக சபையோர்களே பெற்றோர்களே அன்பான பழைய மாணவிகளே இனி என்றும் தலைதூக்காது என்று சந்தேகத்துக்கிடமாய் இருந்த தெக்ஷிணகான சபாவைத்தலை தூக்க வைத்து விட்டோம். தூக்கிய தலை குனியாமல் இருப்பது உங்கள் கைகளிலேயே உள்ளது. பழைய மாணவிகளே வேற்றுமைகளை மறந்து சபாவை நடத்திச் செல்ல வேண்டிய பொறுப்பு உங்களுடையதே நீங்கள் ஒன்று சேர்ந்து ஒரு உப குழு அமைத்துப் பொறுப்பேற்றால் அது நீங்கள் கலைமகளுக்கும் உங்கள் வாழ்வில் ஒளியேற்றி அணைத்தும் அணையாத தீபமான பா. இராஜராஜேஸ்வரி அவர்களுக்கும் செய்யும் ஒப்பற்ற சேவையாகும்.

பாரிய பொறுப்புகளை நிறைவேற்றப் புறம்பான செயற் குழு ஒன்றும் தொழிற்படும்.

கூடிய விரைவில் புதிய நிர்வாகக் குழுவைத் தெரிவு செய்ய வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெறும்.

சபாவில் உறுப்பினராகச் சேர விரும்புபவர்கள் ஒரு வருடசந்தா ரூபா 60/- ஐயும் முழுதாகவோ மூன்று தவணைகளிலோ கட்டி உறுப்புரிமை பெற்றுக் கொள்ளவும்.

பழைய உறுப்பினர்கள் தங்கள் பழைய நிலுவையைக் கட்டி புதிய சந்தாவையும் செலுத்தி உறுப்புரிமையைப் புதுப்பித்துக் கொள்ளவும்.

இந்தமகத்தான பணியைச் செய்ய எனக்கு சகல வல்லமையையும் அளித்த இறைவனுக்கும் உங்களுக்கும் என்நன்றி கூறி முடிக்கிறேன்.

வணக்கம்

**பாலேஸ்வரி நல்லரெட்ணசிங்கம்**
(தலைவர்)



வட இலங்கை சங்கீத சபாவால் நடாத்தப்பட்ட பரீட்சையில் 1986, 1987 ம் ஆண்டு எமது சபா மாணவிகளின் பெறுபேறுகள்.

# 1986

**முதலாம் ஆண்டு**

முதாலம் பிரிவு

செல்வி ச. சந்திரலக்சுமி

இரண்டாம் பிரிவு

செல்வி பா. நர்மதா

**சாதாரணம்**

செல்வி பா. பகீரதி

,, ச. கோணேஸ்வரி

**இண்டாம் ஆண்டு**

முதாலம் பிரிவு

செல்வி. சிவராசினி

,, இ. நிவாசினி

S. ஞானேஸ்வரி

**மூன்ரும் ஆண்டு**

இரண்டாம் பிரிவு

ச. அங்கயற்கன்னி

**நான்காம் ஆண்டு**

இரண்டாம் பிரிவு

செல்வி கௌரி மாணிக்கம்

சாதாரண பிரிவு

செல்வி க. சசிகுமாரி

**ஐந்தாம் ஆண்டு**

மதிவாணி சண்முகநாதன் (வாய்பாட்டு) மதிவாணி சண்முகநாதன் (வயலின்)

செல்விகள்

தக்சாயினி இன்பரெட்ணம் (வாய்பாட்டு)

உமாசிவகுமாரி குகதாசன் ,,

புஷ்பலதா சித்திரவேல் (நூதனசித்தி செய்முறை)

# அன்பளிப்பு விபரம்

## நெதலார்ந்து தூதரகம் ரூபா 30,000/-

## ஞாபகார்த்த அன்பளிப்பு

| | ரூபா. சதம். |
|---|---|
| செல்வி விஜயகுமாரி தவசிலிங்கம் பழைய மாணவி | 10,000 00 |
| பிரம்ம ஸ்ரீ சோ. ரவிச்சந்திரக் குருக்கள் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய கர்த்தா | 3000 00 |
| திருக்கோணமலை திருக்கேதீஸ்வர ஆலய விழாச்சபை | 3000 00 |
| திருமதி பிரேமா சிவசங்கரன் பழைய மாணவி | 2000 00 |
| திருமதி தையல்நாயகி ஜெயரெட்ணம் | 1500 00 |
| டொலர் ஏஜன்ஸி | 1500 00 |
| திரு நேமிநாதன் நவநீதன் | 1200 00 |
| திருமதி பத்பலோஜினி குணராஜசிங்கம் | 1000 00 |
| பழைய மாணவி ஒஇபா | 1000 00 |
| திருமதி பாக்கியலெட்சுமி சங்கரதாஸ் நிர்வாக உறுப்பினர் | 1000 00 |
| திருமதி பாலேஸ்வரி நல்லரெட்ணசிங்கன் நிர்வாக உறுப்பினர் | 1000 00 |

## சீவியகால அங்கத்துவ அன்பளிப்பு

| | ரூபா சதம் |
|---|---|
| நலன் விரும்பி | 700 00 |
| திரு மு. சுந்தரலிங்க தேசிகர் ஆலயடி விநாயக தேவஸ்தானம் அபிராமி அந்தாதி 500 பிரதிகள் | 660 00 |
| திரு சு, வேலுப்பிள்ளை செல்வச்சந்நிதி ஸ்ரோர்ஸ் | 600 00 |
| நியூ கோபால் கம்பெனி | 600 00 |
| செல்வி ~~திரு~~ தி. சரோஜாதேவி லண்டன் 30 | 578 33 |
| திரு இ. குமார் லண்டன் பவுன்ஸ் | 578 34 |
| செல்வி இ. ரூபா லண்டன் | 578 33 |
| செல்வி செ. வடிவேல் வட்டாரக்கல்வி அதிகாரி (ஆங்கிலம்) | 500 00 |
| திரு ந. கிருஷ்ணதாசன் ஓய்வு பெற்ற நிதியரசர் | 500 00 |
| பழைய மாணவி ஒருவர் | 500 00 |
| திருமதி க. புஷ்ராஜா பழைய மாணவி | 500 00 |
| திருமதி இ. கந்தையா ஓய்வு பெற்ற ஆசிரியர் | 500 00 |
| திருமதி ச. ஜெகதீஸ்வரன் பழைய மாணவி | 500 00 |
| செல்வி ஜெயலக்சுமி நமசிவாயம் | 500 00 |
| டாக்டர் K. ஹேமச்சந்திரா | 500 00 |
| டாக்டர் பா. யோகநாதன் | 500 00 |
| திரு. கனகநாயகம் பத்மநாதன் | 500 00 |
| திரு. இரத்தின சபாதி சுப்பிரமணியம் | 500 00 |

திருமதி வனஜா ஜெகதீஸ்வரன்

# பொருட்கள் அன்பளிப்புச் செய்தவர்கள்

மண்டபத்துக்கு வேண்டிய வண்ணத்தீந்தை
றோட்டரிக்கழகம் திருக்கோணமலை.

திரைச்சீலை சிறுவர் பாதுகாப்பு நிதியம் (*U. K.*)

இசைத்தட்டுகள், புத்தகங்கள், பூட்டுகள், ஜன்னல் நிறுத்தக் கருவி (Stops) திரு *T.* பத்மநாதன் பிரபல இசையமைப்பாளர்

ரேப் றெக்கோடர், மைக், கிரமபோன், ~~ரூ இன் வன்~~ கதிரை றெக் கோட் பிளேயர் ட்ரான்சிஸ்டர் ரேடியோ திரு நேமிநாதன் நவநீதன்

சுவரில் பொருத்தப்படும் எழுத்து சிலேட்டுகள்
திரு *D. N.* நல்லரெட்ணசிங்கம்

தட்டச்சு உதவி செல்வி வித்தியா அரியாநாயகம்

திருத. செல்வரெட்ணம் இரண்டு சீமெந்து பெஞ்சிகள்

## சாதாரண அன்பளிப்பு

| | ரூபா சதம் |
|---|---|
| தி/ஸ்ரீ சண்முக வித்தியாலய அதிபர் ஆசிரியர்கள் | 405 00 |
| நலன் விரும்பி | 300 00 |
| செல்வி விஜயலக்சுமி சின்னத்தம்பி பழைய மாணவி | 300 00 |
| திரு அ. சிவலோகநாதன் அதிபர் இந்துக்கல்லூரி | 300 00 |
| திருமதி தேவிகாராணி முருகுப்பிள்ளை பழைய மாணவி | 300 00 |
| திருமதி புவனேஸ்வரி ஜெயதேவா | 300 00 |
| தி/இந்துக்கல்லூரி அதிபர் ஆசிரியர்கள் | 280 00 |
| தி/விக்நேஸ்வர அதிபர் ஆசிரியர்கள் | 250 00 |
| திரு மா. சண்முகரெட்ணம் பன்ஸி பலஸ் | 200 00 |
| செல்வி ந. நகுலேஸ்வரி பழைய மாணவி | 200 00 |
| செல்வி ந. நவநீதராணி பழைய மாணவி | 200 00 |
| ~~திரு கனகநாயகம் பத்மநாதன்~~ | ~~200 00~~ |
| திரு அ. அருணகுமார் | 100 00 |
| திரு பா. விஜயநாதன் | 100 00 |
| டாக்டர் சீ. குணரஞ்சினி | 100 00 |
| செல்வி ச. பாமதி பழைய மாணவி | 100 00 |
| செல்வி கு. சந்திரகுமாரி பழைய மாணவி | 100 00 |
| திரு *K.* பாலசிங்கம் | 100 00 |
| திரு கு. சரவணமுத்து | 100 00 |
| செல்வி சிவராஜினி மோகன்ராஜ் | 100 00 |
| நலன் விரும்பி | 50 00 |
| நலன் விரும்பி | 100 00 |
| *C.* சந்திரக்குமார் ரோக்கியோ சீமெந்து கம்பனி | 100 00 |
| *D. J.* சம்பத்குமார் ரோக்கியோ சீமேந்து கம்பனி | 100 00 |
| *C.* ஞானசேகரன் ரோக்கியோ சீமேந்து கம்பனி | 100 00 |
| *S.* உதயகுமார் ரோக்கியோ சீமேந்து கம்பனி | 50 00 |
| ஸ்ரீமதி பொ. சிந்திரவேல் | 100.00 |

# 1986ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற பரீட்சை பெறுபேறுகள்

## முதலாம் ஆண்டு தோற்றியோர் நால்வர்

1st Divison

ச. சந்திரலக்சுமி

2nd Divison

பா. நர்மதா

*சாதாரணம்*

பா. பகீரதி ச. கோணேஸ்வரி

## இரண்டாம் ஆண்டு தோற்றியோர் மூவர்

1st Divison

**M.** சிவராகினி
இ. நிவாசிணி மூவரும் தியரியில் விசேடசித்தி
**S.** ஞானேஸ்வரி

## மூன்றும் ஆண்டு

2nd Divison

ச. அங்கையற்கண்ணி – *தியரியில் விசேடசித்தி*

## 4ம் ஆண்டு தோற்றியோர் இருவர்

2nd Divison

கௌரி மாணிக்கம்

*சாதாரணபிரிவு*

க. சசிகுமாரி

## 5ம் ஆண்டு தோற்றியோர் (யாழ்நகர் சென்று) ஐவர்

மதிவாணி சண்முகநாதன் *[வாய்ப்பாடு]*
மதிவாணி சண்முகநாதன் *[வயலின்]*
தக்ஷாயிணி இன்பரெட்ணம் *[வாய்ப்பாடு]* சித்தியடைந்
உமாசிலகுமாரி குகதாஸன் *[வாய்ப்பாடு]* துள்ளனர்
புஸ்பலதா சித்திரவேல் **Refered Pass Pratical**

Teachers Grade *[தோற்றியது யாழ்நகர் சென்று*
செல்வராணி மாணிக்கம்
Refered Pass Pratical

# 1987ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற பரீட்சை பெறுபேறுகள்

## முதலாம் ஆண்டு

கிருஷ்ணவிஜி கிருஷ்ணபிள்ளை - *2ம் பிரிவு* 2nd Divison

## இரண்டாம் ஆண்டு

கோணேஸ்வரி - சரவணமுத்து - 2nd Divison
நாகவல்லி - நவரெட்ணம் - 2nd Divison
புஸ்பலதா - சித்திரவேல் *(வயலின்)* - Ordnary

## மூன்றும் ஆண்டு

சிவராகினி மோகனராஜ் - 1st Divison
கிருஷ்ணலதா சித்திரவேல் - Ordnary
ஞானேஸ்வரி சரவணமுத்து - 2nd Divison
நிவாசினி இன்பரெட்ணம் - Ordnary

## 5th GRADE

புஸ்பலதா - சித்திரவேல் - Ordnary

## Teacher's Grade (ஆசிரியர் பகுதி) *(வாய்ப்பாடு)*

தக்ஷாயினி இன்பரெட்ணம்
செல்வராணி மாணிக்கம்
மதிவாணி சண்முகநாதன்

*With Best Compliments from*

# VEERABALAN & CO.

**General Hardware Merchants**
**Transport Agents**
**&**
**Authorised Dealers of**
**B. M. C. Ceyesta Matress, C. I. C. Paint**
**&**
**Mitsui Cement**

No, 194, Main Street, Trincomalee.

Phone: 026-2580

*With Best Compliments from*

# SELVASANNITHI STORES

Transport Agents

&

Dealers of

Elephant Brand Soft Drinks,

Pepsi Cola and Miranda.

**No. 54/2, Sea View Road, Trincomalee.**

திருகோணமலை திருக்கோணேஸ்வர ஆலயம்


*With Best Compliments from*

# DOLLAR AGENCIES

General Merchants
Whole Sale & Retail Dealers
Regd. Govt. Contractors

**No. 80, Main Street, Trincomalee**

COLOMBO OFFICE

**Klgno 8**
**Gunasinghapuraya, Colombo-12.**

---

*With Best Compliments from*

# *New Gopalan Company*

Authorised Dealers for: C. I. C. Paints (Chemical Industries) S-Lon Pipes & Fittings (Maharaja Organisation, Centric & Robin Water Pumps & Generators (Jina-ena Ltd.) Dealers in Building Materials, Electrical Goods, Sawn Timbers, Spare Parts, General Hardware and Transport Agents.

**No. 28, Sea View Road, Trincomalee.**

Grams: GOPAL Telephone: 026-2619